IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் விருந்தோம்பல் பண்பாடு

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
உதவிப் பேராசிரியர் & தலைவர்,தமிழியல்துறை,தமிழியற்புலம்
இயக்குநர் (பொ) ,திருக்குறள் இருக்கை
இயக்குநர் (பொ) ,தமிழ்ப் பண்பாட்டு மரபுச்செல்வங்கள் நடுவம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625021, தமிழ்நாடு,இந்தியா

**Dr.B.SATHIYAMOORTHY**
Assistant Professor and Head, Department of Tamilology, School of Tamil studies,
Director (i/c), Thirukkural Chair,
Director (i/c), Centre for Tamil Cultural Heritage,
Madurai Kamaraj University, Madurai - 625021, Tamil Nadu, India

தமிழர்தம் பண்பாடுகளுள் சிறந்தது விருந்தோம்பல் ஆகும். தலைவனும் தலைவியும் இல்லறத்தில் இணைந்து வாழ்வது சிறப்பு. அவ்வாழ்வில் நாள்தோறும் விருந்தினர்க்கு விருந்து படைத்து வாழும் வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாகும்.

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" [1]

என்று தொல்காப்பியம் குறிக்கின்றது. விருந்து போற்றலும், உறவினர்க்கு வேண்டுவன தந்து காத்தலும் இல்லத்தரசியின் கடமைகள் என்று தொல்காப்பியர் உரைக்கிறார்.

சங்க இலக்கியங்களிலும் விருந்து போற்றும் பண்பு சிறந்து விளங்கியுள்ளது. சங்க இலக்கிய நூலான குறிஞ்சிப் பாட்டில் "விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் உண்போம்" என்று தலைவன் தலைவியிடம் உரைக்கிறான். இதுவே வாழ்வின் இலக்கு என்பது அறியவருகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் விருந்து போற்றும் பண்பு தமிழர்தம் தனித்த பண்பாட்டுச் செயல்பாடாகக் கருதப்பெற்றுள்ளது.

**விருந்தே இல்லறக் கடமை**

இல்லறக் கடமைகளில் சிறந்தது விருந்து போற்றல் ஆகும். திருக்குறள் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை அமைத்து விருந்து போற்றும் பண்பினைச் சிறப்பிக்கிற்து. இல்வாழ்க்கை வாழ்வது என்பது விருந்தினரைப் போற்றி உதவுதலே ஆகும். சாகாது காக்கும் மருந்து என்றாலும் அதனைத் தாம் மட்டும் உண்ணாமல் விருந்தோடு உண்பதே சிறப்பாகும். விருந்து செய்பவன் துன்பம் கொள்ளமாட்டான். அவனது வீட்டில் இலக்குமி செல்வத்தைக் குறையாது அளிப்பாள். வந்த விருந்தினரை உபசரித்து அனுப்புபவனும், இன்னும் விருந்து வராதா என்று காத்திருப்பவனும் தேவர் உலகத்தில் வாழும் தகுதி பெறுவான். விருந்தினர்களின் உள்ளம் முகம் மாறுபட நடத்தினாலே வருந்தும். எனவே விருந்தினை இன்முகத்துடன் உபசரிக்க வேண்டும். இவ்வாறு இல்லறத்தாரின் இனிய கடமையாக விருந்து உபசரித்தல் அமைகிறது.

வேற்று அரவம் சேரான் விருந்து ஒளியான் தன் இல்லுள்
சோற்று அரவம் சொல்லி உண்பான்ஆயின் மாற்று அரவம்
கேளான் கிளை ஓம்பின் கேடு இல் அரசனாய்
வாளால் மண் ஆண்டு வரும்[2]

என்னும் பாடலில் விருந்தினரைக் கண்டு ஒளியாதவன் உலகை ஆளும் அரசனாவான் என்று கூறப்படுகிறது. சுற்றம் ஓம்ப வேண்டும். தீமை இலாத சொற்களைப் பேச வேண்டும். இவற்றோடு விருந்தினரையும் போற்ற வேண்டும் என்கிறது இப்பாடல்.

**விருந்து பண்பாடு**

நான்கு கருத்துகளை அடுக்கி மொழியும் நான்மணிக்கடிகையில் விருந்தினர்க்கு நிறைய உணவுகளை கலங்களில் வைத்துப் பரிமாறுவது சிறப்பு என்று கூறப்பட்டுள்ளது.

நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்பழல்; சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பவர் நாகர்; - தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை; கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து [2]

என்ற பாடலின் வழியாக நெய் ஊற்ற வேள்வித் தீ அழல் பெருகி எரியும். தேவர்கள் வணங்க வரம் தருவர். தொழுவத்தில் உள்ள தாய்ப்பசுவிடம் கன்றினை நெருங்கவிட அதனால் பால்வளம் பெருகும். கலங்கள் பலவற்றில் அமுதும் பிறவும் வைத்து ஊட்ட விருந்தினர் உண்டு மகிழ்வர் என்று விருந்தினர் மனநிலையைக் காட்டுகின்றது நான்மணிக்கடிகை

**ஆ உடையவன் விருந்து சிறப்பு**

எக்காலத்தில் சென்றாலும் பசு வைத்திருப்பவன் வீட்டில் ஏதேனும் விருந்து கிடைத்துக்கொண்டு இருக்கும். ஏனெனில் பசுவின் வழியாக விருந்திற்குத் தேவையான நெய் , மோர், பால், தயிர் ஆகியன தடையின்றிக் கிடைக்கும் என்பதால் பசு வைத்திருபபவனின் விருந்து சிறப்பிற்குரியது.

சிற்றாள் உடையான் படைக்கல மாண்பு இனிதே
நட்டார் உடையான் பகை ஆண்மை முன் இனிதே
எத்துணையும் ஆற்ற இனிது என்ப பால் படும்
கற்றா உடையான் விருந்து”[3]

என்னும் பாடலில் மூன்று சிறந்த கருத்துகள் தரப்பெற்றுள்ளன. நல்ல வலிமை மிக்க இளைஞர்களால் அமைந்த படையின் சிறப்பு இனிது. உறவினர் பெருக்கத்தை உடையவன் பகை வந்தாலும் அதனை எதிர்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும். அது இனிது. பால் தரும் நல்ல ஆவினை உடையவன் விருந்தினர்க்கு இனிதாக அமைவான். பால் பொருள்களை அவர்களுக்கு அளிப்பான் என்ற கருத்தினை மேற்பாடல் காட்டுகின்றது.

**உதவி என்பது விருந்து செய்தல்**

தாளாளன் என்பான் கடன் படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்து இருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இ மூவர்
கேள் ஆக வாழ்தல் இனிது[4]

என்ற பாடலில் முயற்சி உடையவன் என்பான் கடன் படாமல் வாழ்வான். உதவி செய்பவன் என்பவன் விருந்தினர் வீட்டின் ஒரு புறத்தில் இருக்க அவர்களை விடுத்து உணவு உண்ணாதவன் ஆவான். பிறர் மனம் அறிந்தவன் என்பான் மறவாத் தன்மை உடையவன் என்று மூவரை இனம் காட்டுகிறது திரிகடுகம்.

**கற்புடைய பெண்ணின் கடமைகள்**

கற்புடைய மனைவியின் கடமைகளாக பின்வருவன சொல்லப்படுகின்றன.

நல் விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்
இல் புறஞ்செய்தலின் ஈன்ற தாய் தொல் குடியின்
மக்கள் பெறலின் மனை கிழத்தி இ மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்[5]

மனைவி என்பவள் சிறந்த நட்பினள். சிறந்த தாய். சிறந்த மனைக்கிழத்தி என்கிறது இப்பாடல். கணவன் அழைத்து வந்த விருந்தினரை உபசரித்து மகிழ்வதால் மனைவி நட்பிற்கு உரியவள் ஆகிறாள். இல்லறத்தைச் சிறப்பாகக் காப்பதால் தாய் ஆகிறாள். மக்கள் பெறுவதால் மனைவி ஆகிறாள். இப்பாடல் வழியாக கணவனும் மனைவியும் இணைந்து விருந்தோம்பலைச் செய்தல் வேண்டும் என்பது தெரியவருகிறது.

சிறுபஞ்ச மூலம் பாடலிலும் நல்ல பெண்ணிற்கான இயல்புகள் சுட்டப்பெறுகின்றன.

வருவாய்க்கு தக்க வழக்கு அறிந்து சுற்றம்
வெருவாமை வீழ் விருந்து ஓம்பி திரு ஆக்கும்
தெய்வத்தை எஞ்ஞான்றும் தெற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு[6]

என்னும் பாடலின் வழியாக பெண்டிர் சிறப்புகள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

வருவாய்க்கு தக்க வகையில் குடும்பச் செலவுகளைச் செய்தல்,உறவினரைப் பாதுகாத்தல், விருந்து ஓம்பல், தெய்வத்தை வழிபடல் ஆகியன பெண்ணிற்கான சிறந்த பண்புகள் என்கிறது சிறுபஞ்ச மூலம்.

**நாலடியார் காட்டும் விருந்துப் பண்பாடு**

புல் அறத்தின் நன்று, மனை வாழ்க்கை; போற்று உடைத்தேல்,
நல்லறத்தாரோடும் நடக்கலாம்; நல்லறத்தார்க்கு
அட்டு, இட்டு, உண்டு, ஆற்ற வாழ்ந்தார்களே, இம்மையில்
அட்டு, இட்டு, உண்டு, ஆற்ற வாழ்வார்.[8]

என்னும் பாடலில் வழியாக அட்டு , இட்டு உண்டலே விருந்துப் பண்பாடு என்று உணரமுடிகின்றது. துறவு வாழ்வை விட மனை வாழ்க்கை சிறந்தது. இல்லறத்தார் துறவறத்தாருக்கு அட்டு, இட்டு, உண்டு வாழ்தல் வேண்டும். அவ்வாறு முற்பிறவியில் வாழ்ந்தவர்களே இப்பிறவியில் நல்ல நிலையில் இல்லறம் நடத்துபவர் ஆவர். இவ்வாறு இற்றை நாள் வாழ்வில் சிறப்பாக வாழ்பவர்கள் முந்தை நாளில் தவத்தினருக்கு விருந்து செய்தவர்கள் என்று நாலடியார் மொழிகிறது.

**உணவு அளிக்கும் முறை**

இல்லறத்தார் என்பார் இயல்புடைய மூவருக்கும் உணவு அளித்தல் வேண்டும் என்கிறது திருக்குறள். ஏலாதி இதனை இன்னும் விரித்து மொழிகிறது.

நடப்பார்க்கூண் நல்ல பொறைதாங்கி னார்க்கூண்
கிடப்பார்க்கூண் கேளிர்க்கூண் கேடின் றுடல்சார்ந்த
வானகத்தார்க் கூணே மறுதலையார்க் கூணமைத்தான்
தானகத்தே வாழ்வான் தக. [9]

என்ற பாடலின் வழியாக இல்லறத்தார் உணவு தந்து காக்கவேண்டியவர்களை அறியமுடிகின்றது.

1. துறவு பூண்டு நடந்து திரிவார்க்கு உணவு
2. நல்ல சுமையைத் தாங்கிக்கொண்டவர்க்கு உணவு
3. படுத்த படுக்கையாகக் கிடப்பவர்களுக்கு உணவு
4. உற்றார் உறவினர்களுக்கு உணவு
5. கேடில்லா உடலைப் பெற்றிருக்கும் வானகத்துத் தேவர்களுக்கு உணவு
6. மறுதலையாக மண்ணுலகில் துன்புறுபவர்களுக்கு உணவு

ஆகிய அறுவர்க்கு இல்லறத்தான் உணவு வழங்கிப் பாதுகாக்க வேண்டியவனாக விளங்குகிறான்.

இவ்வாறு உணவளித்தல் என்பது தலையாய கடமையாக இல்லறத்தாருக்கு அமைகிறது.

**தொகுப்புரை**

இல்லற வாழ்வே சிறந்த வாழ்வாகும். அதிலும் தன்னை நம்பியவர்களுக்கு நம்பி வந்தவர்களுக்கு உணவு வழங்கலே சிறப்பான பண்பாட்டுச் செயல்பாடாகும். நாளும் விருந்து வழங்கி வருபவன் இல்லத்தில் செல்வம் குறையாது . அதிகரிக்கும். விருந்தினர்களுக்குப் பலவகை உணவுகளை அவர்கள் மனம் மகிழ வழங்க வேண்டும். கற்புடைய பெண் என்பவள் தாயாக, நட்பினளாக, மனைவியாக தன் செயல்பாடுகளைச் செய்தல் வேண்டும். விருந்து செய்வதால் மனைவி கணவனுக்கு நட்பு உரிமை பெறுகிறாள். விருந்தினரை விலக்கித் தான் மட்டும் உண்பது சிறப்பல்ல. விருந்தினருடன் இணைந்து உண்பதே இல்லறக் கடமை.

**சான்றாதாரங்கள்**

1. தொல்காப்பியர் தொல். கற்பியல் நூ.எண். 11
2. காரியாசான், சிறுபஞ்ச மூலம், பாடல் எண். 48
3.விளம்பி நாகனார், நான்மணிக்கடிகை, பாடல் எண். 61
4. பூதஞ் சேந்தனார், இனியவை நாற்பது பாடல் எண் 38
5. நல்லாதனார், திரிகடுகம், பாடல் எண். 12
6. மேலது பாடல் எண். 64
7. காரியாசான், சிறு பஞ்ச மூலம் பாடல். 42
8. சமண முனிவர்கள், நாலடியார், பாடல் எண். 25
9. கணி மேதாவியார், ஏலாதி, பாடல் எண். 48